*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **04 செப்டம்பர், 2025**

## <u>மிலாது நபி வாழ்த்துச் செய்தி</u>

நாடு முழுவதும் உள்ள மக்கள் அனைவருக்கும் குறிப்பாக இஸ்லாமிய சகோதர-சகோதரிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த மிலாது நபி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித சமுதாயத்திற்கு அன்பு, இரக்கம், மனித நேயம் ஆகியவற்றை போதித்தவர் நபிகள் நாயகம். சமத்துவம் நிறைந்த மனித சமுதாயத்தை உருவாக்குவதற்கான இலட்சியத்தை முன்வைத்தவர். அவரது பிறந்த நாளை இஸ்லாமிய மக்கள் மிலாது நபி விழாவாக கொண்டாடி வருகிறார்கள்.

இந்த நன்னாளில் அவரது சீரிய போதனைகளையும் சிறந்த வழிகாட்டுதல்களையும் ஏற்று மனித நேயம் நிறைந்த வாழ்க்கையை நாம் வாழ்ந்து காட்ட உறுதி ஏற்போம்.

(K. கைலாஷ்நாதன்)